பதிவு எண்—ம. 5726 வெள்ளிக் கிழமைகள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம் ; நந்தன, ஆனி ; 11—7—52. தளிர்—41

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

செய்யத் தக்கது !

மக்களிற் பலர் செயலாற்றுங்கால் தக்கன இவை தகாதன இவை என்று பாகுபாடறிந்து நடப்பதில்லை. உணர்வற்ற பொறிகள் போல ஒழிவின்றி எதானும் ஒரு செயலைப் புரிந்து கொண்டே இருக்கின்றனர். செயல்களில் நல்லனவும் உண்டு தீயனவும் உண்டு. தீய செயல்கள், நிகழும்போது இன்பமூட்டுவன போன்றும் திரண்ட நலம் பயப்பன போன்றும் காணப்படும். ஆனால் அவற்றால் இறுதியிற் பெறுவது துன்பந் தவிர வேறில்லை. நல்ல அறச்செயல்கள் நிகழும் போதே எதிர்பார்த்த பலனைத் தாரவிடினும் ஈற்றில் எண்ணியதற்கும் மேலாகப் பலன் தருதல் உறுதி.

நற்செயல்களின் ஒழுக்கமே ஒருவன் வாழ்க்கைப் பாதையைத் துப்புரவு செய்ய வல்லது. நற் செயல்கள் என்பன இவ்வாழ்வில் மனையறங்களைக் காத்தோம்பி இடையறாமல் நல்வினைகளையே செய்தொழுகல். இத்தகைய செயல்களுக்கு இடையூறாகப் பல வேறு தீமைகள் குறுக்கிடுவதும் கூடும். அவைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் உறுதியாக உள்ளத்துள் உள்ளுவதெல்லாம் உயர்ந்த நற் கருத்துகளாகத் திகழ நெறி பிறழாமல் நல்லறச் செயல்களையே நாளும் கடைப்பிடித்தல் நலமாகும்.

ஆகவே மக்கள், வாழ்வில் உறுதியாகக் கடைப்பிடித்துச் செயலாற்றத் தக்கது நல்லறச் செயலாகவும், தகுதியின்மை கருதிப் புறத்தொதுக்க வேண்டியது தீய செயல்களாகவும் ஆன்றோர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

செயற்பால தோரும் அறனே ஒருவற் (கு)
உயற்பால தோரும் பழி.

ஒருவற்குச் செயற்பாலது அறனே — ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே; உயற்பாலது பழியே — ஒழிதற் பான்மையது தீவினையே.

"ஓரும்" என்பன இரண்டும் அசைநிலைகள். தேற்றப் பொருள் தரும் ஏகாரம் 'பழி' என்பதனோடும் கூட்டப்பட்டது. பழிக்கப்படும் இயல்பினதான தீவினையைப் 'பழி' யென்றார்.

தீவினைகள் எவ்வாறேனும் வாழ்விடையில் புகுந்து ஒழுக்க நெறியைத் தடை செய்வதுண்டென்றும், அத் தடைக்குத் தப்பி உய்ந்து போதல் சிறப்புடைய தென்றும் உணர்த்துவார் 'உயற்பாலது பழி' என்றார்.

இதனால் செய்வது நல்வினையென்றும் ஒழிவது தீவினையென்றும் வகுத்துக் காட்டப் பெற்றது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	நந்தன, ஆனி,	தளிர்
4	11-7-52 வெள்ளி	41

திருக்கழுக்குன்றம் — ஆனிமகப் பெருவிழா

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் வழக்கம் போல் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தை ஒட்டித் திருமுறைப் பெருவிழா சிறப்புற ஆனி 13, 14, 15, 16 தேதிகளில் நடைபெற்றது.

கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு, விழா பலவகைப் புதிய சிறப்புகளுடனும் பெருங்கூட்டத்துடனும் நிகழ்ந்தது. ஏற்பாடுகளில் சிற்சில குறைகள் இருந்தன என்றாலும் மொத்தத்தில் விழா மிகவும் சிறப்பாகவும் வளர்ச்சிப் போக்கிலும் இருந்தது. விழாவின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பெருங்காரணம் ஆசிரியர் இளவழகனார், திருமுருக. கிருபானந்தவாரியார், திருப்புகழ்மணி **T. M.** கிருஷ்ணசாமி ஐயர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய சான்றோர்கள் விழாவில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டதுதான்.

இவர்களுள் வாரியார் அவர்கள் தாம் சென்ற இடங்களில் எல்லாம் விழாப்பற்றி எடுத்துச் சொல்லியதும், ஆசிரியர் அவர்கள் இவ் விழாவை முன்னிட்டே தொண்டமண்டல யாத்திரையை (2-6-52) முதல் மேற்கொண்டு அங்கங்கே சுற்றுச் சொற்பொழிவுகள் (பிரசாரம்) செய்து வந்ததும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

விழா நிகழ்ச்சிகளை விரிவாகச் செய்வதற்குப் பெருந்துணையாக இருந்தவர்கள் வண்ணையம்பதி சிவத்திரு. வள்ளியம்மையார். அவர்களாவர். ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு மூன்று நாட்கள் இரவு பகலும் உணவும் சிற்றுண்டியும் கொடுத்து 'உபசரிப்பது' எளிதான செயலாகுமா? அதனை நிறைவேற்றிய அம்மையாரின் தாராளமான பெருந்தன்மைக்கு இக்காலத்தில் ஈடும் எடுப்பும் காண்பது மிகவும் அரிதாகும்.

முதல் நாள் (26-6-52)

மாலை 7 மணிக்கு அடிவாரத்தில் ஈண்டிய அடியார்களை வரவேற்று எல்லோருக்கும் சந்தனம் பன்னீர் வழங்கித் தலைவர்களுக்கு மலர்மாலை அணிவித்து மேளத்துடன் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார் மரக்காணம் திரு. எ. கணபதி முதலியார். இரு வரவேற்பு இதழ்கள் அவராலும் கானக் கோயிற் பேட்டைத் தேவார சபையினராலும் படித்துக் கொடுக்கப் பட்டன. பின், திருவள்ளுவரகம், இராமநாத பிள்ளை அவர்கள் தலைமையில் ஊர்க்கோயில் வழிபாடு ஏறத்தாழ நாலாயிரம் அன்பர்கள் திரண்டு பின் தொடர நடைபெற்றது.

வழிபாட்டின் பயன் பலவகையிலும் அமைதி பெறுதலே எனப் பிள்ளையவர்கள் மணிமொழிபோல் மிகச் சுருக்கமாக விளக்கினார்கள்.

திரிபுரசுந்தரியின் திருக்கோலக் காட்சியும், அவர் முன்னிலையில் திருநெறித் தமிழிசைச் செல்வர் திரு. கூத்தரசு (சைதை) அவர்களின் இனிய திருமுறை இசையரங்கும் சிறப்பாக அமைந்தன.

இரண்டாம் நாள் 27-6-52.)

மாணிக்கவாசகர் திருநாள்

காலை 6-30 மணிக்கு ஊர்க் கோயிலில் உட்கோபுர வாயிற் பிள்ளையார் திருமுன் அடியார்கள் கூடினர். வழிபாட்டுக்குப் பின் ஆசிரியர் திருமுறை வரலாறு பற்றியும், பொல்லாப் பிள்ளையார் அருள்பற்றியும், திருமுறை விழாவுக்குச் சிறப்பிடம் திருக்கழுக்குன்றமே என்பது பற்றியும் உணர்ச்சி மிக விளக்கினார்கள். யானை மேல் திருமுறைகள் ஒப்பனையோடு திகழ, பதினொன்கணத்தவரோ எனப் பல ஊர்களிலிருந்தும் போந்திருந்த 18 சபையார் திருமுறைகளைப் பாராயணம் செய்து கொண்டு அணி அணியாகப் பின் தொடர, விழாக் கூட்டம் மலை வலமாகச் சஞ்சீவிமலைச் சாரலில்

உள்ள திருவடிக் கோயிலை 9-9½ மணிக்குச் சார்ந்தது.

அங்கே மேற்படி பிள்ளையார் வழிபாட்டைச் சிறப்புறச் செய்வித்த சென்னை திரு. வேதாசலம் செட்டியார் அடியார்களுக்குக் காலை உணவாகப் பிள்ளையார் அருளமுதை (பிரசாதம்) வழங்குவித்தார்.

திருவடியிடத்தில் அமைதியான முறையில் பூசையும், வழிபாடும் சிறந்தது. அன்பர் பலர் உருக்கமாகப் பாடினர். திருவள்ளுவரகம், வாரியார், ஆசிரியர் முதலியோரின் அரிய ஆதாவு மொழிகளுக்குப் பின் திரு. எ. கஜபதி நாயகர் திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம் என்னும் விளக்க நூலைத் திருக்கூட்டச் சார்பில் வெளியிட்டார்.

அந்நூல் இராயபுரம் இறைபணிக்கழகத்தில் ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாகும். ஏறத்தாழ 80 பக்கமுள்ள அந்நூலை 0-8-0 அணு விலைக்குத் திருக்கூட்டத்தார் வெளியிட்டது பெரிதும் போற்றத்தக்க ஒரு செயலாகும். இதுவன்றி இலவசச் சிறு வெளியீடுகளும் விழா நினைவாக கிளிக்குகை திரு சிவானந்த அடிகள் (சிவபுராணம், கருணை மலர்) சென்னை வாசுதேவ பிள்ளை (அருட்பா, ஆளுடைய அடிகள் மாலை) முதலியோரால் வெளிவந்து உலவின. வழக்கம் போல் மாம்பாக்கம் குருகுலத்தாரின் (கழுக்குன்றக் காட்சி, திருக்கழுக்குன்றத் திருப்பதிகங்கள்) அடக்க விலைப்பதிப்புகளும் கௌணியன் அச்சகத்தாரின் பன்னிரு திருமுறைத் திரட்டு முதலியனவும் விற்பனைக்கு வந்திருந்தன.

பகல் உணவு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க வகையில் கதம்ப, தயிர் சோறுகளாக அங்கேயே நிலாச்சோறு போல் வழங்கப்பட்டது.

மருத்து மலைச்சாரலில் மரநிழல்களில் எல்லோரும் ஓர் நிரையாகவும் கூட்டம் கூட்டமாகவும் அமர்ந்து உண்ட காட்சி மிக்க கிளர்ச்சியைக் கொடுத்தது. திருவடியிடமாதலின் அங்கே உண்ட அவ் வருளமுது திருவருள் ஞானத்தையே உண்பது போன்ற பேருணர்ச்சியை நல்கியது. அன்பர்கள் வள்ளியம்மையார் வாழ்க! வாழ்க!! என வாயார வாழ்த்தினர்.

பிற்பகல் 3 மணிக்கு அதே இடத்தில் திருவள்ளுவரகம் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார், சென்னை திரு. இரத்தினசபாபதி நாயகர் முதலியோரின் சொற்பொழிவுகளோடு திருமுறைப் பேரவை நடைபெற்றது.

திருமுறைகளின் பெருமைகளையும் அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளத் தக்க முறைகளையும் தலைவரும், பிறரும் தக்கவாறு விளக்கினர். வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் அவற்றைக் கொண்டே நீக்குக் கொள்ளலாம் என்றும், எல்லாச் சடங்குகளையும் அவற்றாலேயே செய்விக்கலாம் என்றும் அறிவுறுத்தினர்.

மாலை 5-30 மணிக்கு மீண்டும் மலைவலமாக விழாக் கூட்டம் நால்வர் கோயிலை அடைந்தது. அங்கே நால்வர் வழிபாடும், குளப்பாக்கம் அருணகிரி சுவாமிகளின் பேச்சும், இசைச் சோதி மணி, இரத்தின வேலரின் மரபுபிறழாத திருமுறை இசையரங்கும் நன்கு நடைபெற்றன. மணிவாசகருக்கு ஊசல் நிலையில் சிறப்பாக அலங்காரம் செய்திருந்தார்கள். அறுதியில் மூவர் பேட்டையார் செலவில் அன்பர்களுக்குச் சுண்டலும் வழங்கப்பட்டது.

இரவு 11 மணி முதல் 2 மணி வரை (ஒலிபெருக்கிக் கோளாறினால் நேரங்கடந்து தொடங்கியது) திருமுருக கிருபாநந்தவாரியார் அவர்களின் "பெருந்துணை" என்பது பற்றிய விரிவுரை அடிவாரத்தில் மிக நன்றாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் மிகவும் கிளர்ச்சியோடு அவ் விரிவுரையைக் கேட்டு மகிழ்ந்து பயன் பெற்றார்கள்.

மூன்றும் நாள் (28-6-52)

காலை 7 மணிக்குத் திருப்புகழ் மணி அவர்களின் தலைமையில் திருப்படிவிழா தொடங்கியது. பக்திப் பாவசத்தோடு தமது முதிர்ந்த நிலையிலும் அப் பெரியார் உணர்ச்சி மிகப் பாடி அன்பர்களை உருக்க நிலைக்கு ஏற்ற, எல்லோரும் மலைமேல் ஏறினார்கள். தொண்டைமண்டல யாத்திரையைக் கருதியபடி திருக்கழுக்குன்றத்தில் முடித்த ஆசிரியர் அவர்கள் உச்சிச்செல்வனை உணர்த்தற் கரிய உருக்க நிலை

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

யில் நின்று வழிபட்டு, யாத்திரையில் கலந்துகொண்ட அன்பர்களுக்குத் திருநீறு கொடுத்து மகிழ்வித்து உள்ளங்குளிர்ந்தார்கள்.

பிற்பகல் 4மணிக்கு அடிவாரத்தில் சித்தாந்த சிகாமணி கா. வச்சிரவேல் முதலியார் அவர்களின் தலைமையில் இரண்டாம் நாள் திருமுறைப் பேரவை தொடங்கியது. அவர்களின் அரிய தலைமை உரைக்குப் பின் திருவல்லிக்கேணி திருமதி. பத்மாவதி அம்மை **B. O. L. (Hon)** அவர்களுக்கும், புலவர் முருகவேள் **B. O L.** அவர்களும் முறையே 'திருவாசகத் தேன்' 'மணிவாசகர் மாட்சி' என்பன பற்றி இனியமுறையில் பேசினர்.

(சொற்பொழிவுகளின் சாரம் முல்லைக்கொடியில் தொடர்ந்து வரும்)

இடையில் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், ஆசிரியர் அவர்கள் தந்த விளக்கத்துக்குப்பின் மாம்பாக்கம் குருகுலப்பணித்திட்டத்தை நூல்வடிவில் வெளியிட்டு ஆர்வமாகப் பேசி ஆதரவு செய்தார்கள்.

தலைவர் அவர்களின் இனிய முடிவுரையோடு பேரவை இரவு 9– மணிக்கு முடிந்தது.

மீண்டும் இரவு 10 மணிக்கு அதே இடத்தில் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் **B. A., B.L.,** அவர்களின் திருவாசகம்பற்றிய விரிவுரை 1– மணிவரை சிறப்புற நடைபெற்றது.

நான்காம் நாள் (29-6-52)

காலை 9 மணிக்கு அடிவாரத்தில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை **B.A., L:T.,** அவர்கள் தலைமையில் சமய வளர்ச்சி மகாநாடு தொடங்கியது. வரவேற்புரையின் போது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் "வழிபாட்டுக் கூட்டவை" என்னும் பொது அமைப்புப் பற்றியும் அதில் சைவ அமைப்புகளெல்லாம் இணைந்து காலத்திற் கேற்றபடி சமயப் பணிகளைக் கிளர்ச்சியாகச் செய்யவேண்டிய கட்டாயம் பற்றியும், இணைய வேண்டிய முறை பற்றியும், சமய வளர்ச்சியிற் கருத்துடைய அன்பர்கள் எல்லாம் ஆண்டுக் கொருமுறை அதற்கு அடையாளமாக 0-4-0 சமயக் காணிக்கை செலுத்தி நூறாயிரக் கணக்கில் திரண்டு நிற்க வேண்டும் என்பது பற்றியும் மாநாட்டின் நோக்கம் பற்றியும் விளக்கப்பட்டது. தலைவர் அவர்களின் அரிய முன்னுரைக்குப் பின் இருக்கம் ஆதிமூல முதலியார் (திருக்கூட்ட அமைப்பாளர்) படத்தைப் புலவர், மயிலை, சிவ முத்து அவர்கள் தமக்கே உரிய அழுத்தம் திருத்தமான உரைகளோடு திறந்து வைத்தார்கள். சுந்தரப் பெருமாள் கோயில் திரு. மா. சிவகுருநாதம் பிள்ளை அவர்கள் "சிதைந்த சிவாலயங்கள்" என்ற தலைப்பில் மனநெகிழ்ச்சியை உண்டாக்கத் தக்க விரிவுரையை நிகழ்த்தினர்கள். பாடல்பெற்ற பழைய தலங்களைப் பற்றி அவர்கள் கொடுத்த குறிப்புகளும், கொண்டு வந்த தரைப்படங்கள் **(Maps)** முதலியனவும் அவர்களின் அரிய உழைப்பையும் பெரிய சமயப் பற்றையும் எடுத்துக் காட்டின. அவர்கள் பேச்சும் எழுத்தும் நூலாகிப் பரவினல் சமய உலகில் நல்ல திருத்தங்கள் ஏற்படும் என்பது உறுதி. நிற்க, பிறகு சென்னை திரு. இராசரத்தினம் அம்மையார் **M. A., L. T.,** அவர்கள் 'சமயம்' என்னும் தலைப்பில் ஓர் இனிய சொற்பொழிவைச் செய்தார்கள். இறுதியில் திரு. சாமி வேலாயுதனர் அவர்கள் முன் மொழியவும், தலைவர் அவர்கள் தம் முடிவுரையாக வழி மொழியவும் கீழ்க்காணும் கருத்துடைய ஒன்பது தீர்மானங்கள் நிறைவேறின.

(1) சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தின் சார்பில் நிறுவப் பெற்றிருக்கும் வழிபாட்டுக் கூட்டவையில் சைவசபைகள் எல்லாம் இணையவேண்டும்.

(2) சமயக் காணிக்கை செலுத்தும் பழக்கத்தையும், வார வழிபாட்டு வழக்கத்தையும் சீவ காருண்யத் தொண்டுணர்ச்சிகளையும் நம் சமயத்தவர் பால் மிகுதியாக்க ஆங்காங்குள்ள சமயத் தொண்டர்கள் முயலவேண்டும். அதற்குத் திருக்கோயில்கள் திருமடங்கள் முதலியவற்றின் அதிகாரங்கள் தக்க ஆதரவு செய்தல் வேண்டும்.

(3) திருக்கோயில்களும் திருமடங்களும் தமது வருவாயில் குறிப்பிட்ட ஒருபகுதியைச் சமயப்பிரசாரத்திற் கென்று ஒதுக்கி வைத்துச் செலவிடவேண்டும். அரசினரும் அதற்கான சட்டங்களைச் செய்தல் வேண்டும்.

(4) திருக் கோயில்களில் தேவார திருவாசக திருநாலாயிரப் பாடல்களைச் சிறப்பான முறையில் ஓதுவிக்க அதன் அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) இந்து அறநிலையக் கழகத்தை (**H. R. E. Board**) அரசாங்கத்தோடு இணைத்தபோது அரசாங்கக் கணக்குக்கு மாற்றிய அதன் பெருந் தொகையைக் கொண்டு அங்கங்கே சிதைந்து கிடக்கும் பழைய, பாடல் பெற்ற இந்துக் கோயில்களைச் சீர்ப்படுத்தி அமைக்கச் செலவிட வேண்டும்.

(6) அர்ச்சகர்களுக்கு எனத் தனியே பாடசாலையும் தேர்வும் வைத்துத் தகுதிவாய்ந்த அர்ச்சகர்களைத் தயார் செய்ய அரசினர் தக்க சமய அறிஞர்களைக் கலந்து ஆவன செய்ய வேண்டும்.

(7) திருக்கோயில்களின் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளை அவற்றின் அதிகாரிகள் சுண்ணாம்பு முதலியன தீற்றி அழிக்காமல் பாது காக்க வேண்டும்.

(8) பூண்டி தண்ணீர்த் தேக்கத்தில் மூழ்கடிக்கப்பட்ட திருவெண்பாக்கம் திருக்கோயிலை உடனே ஞானி திரு. **T. P.** இராமசாமி பிள்ளை அவர்கள் ஒதுக்கியுள்ள பணத்தைக் கொண்டும் மற்றும் சைவப் பெருஞ் செல்வர்கள் உதவக்கூடிய பணத்தைக் கொண்டும் மீண்டும் புதுக்கி அமைக்க அரசினர் முயல வேண்டும்.

(9) சேக்கிழார் திருப்பணிக் கழகத்தினர் குன்றத்தூர் சேக்கிழார் திருக்கோயிலின் நித்திய நைமித்திகங்கட்குச் செய்து வரும் ஏற்பாட்டுக்கு அன்பர்கள் மிகவும் ஆதரவு செய்ய வேண்டும்.

பிற்பகல் 4 மணிக்குத் திரு. கண்ணன் அடிகள் எடுப்பான முறையில் மாம்பாக்கம் குருகுலப் பணித் திட்டம் பற்றி ஆதரவு மொழிகள் வழங்கினர்.

அப்போது விழாவுக்கு வந்திருந்த காட்ராம்பாக்கம் திரு. வரதா ரெட்டியாரும் அவர்களின் துணைவி திரு. செயலட்சுமி அம்மையாரும் குருகுலத்துக்கு ஓர் ஏகர் நிலமும், முல்லைக்கொடியின் வளர்ச்சிக்கு ரூபாய் நூறும் கொடுப்பதாக உறுதி கூறினர்.

ஆசிரியர் தலைமையில் 5 மணிக்குமேல் பாராயணத்துடன் அன்பர்கள் அனைவரும் மலைவலமாகப் புறப்பட்டுச் சொக்கம்மை திருக் கோயில் சாலை அடைந்தனர். அங்கே உள்ள கருங்கற் பீடத்தில் ஆசிரியர் அமர்வதற்கும், இறைவன் திருவருளே என அன்பர்கள் உள்ளமும் உடலும் சூழலும் குளிரச் சிறுதூறலாக மழை பொழிவதற்கும் சரியாக இருந்தது.

சென்ற ஆண்டிலும் இதே இடத்தில் இதே தேனிப்பு நேரத்தில் ஆசிரியர் பெரிய புராணத்துள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் 'கங்கை' என்று தொடங்கும் முதற் செய்யுளை ஓதி விளக்கம் சொன்னவுடன் அங்கே நிலவிய தண்ணீர்த் தட்டு நீங்கும்படி நல்ல மழை பொழிந்தது. இவ்வாண்டு தண்ணீர்த் தட்டு இல்லையாதலினாற்போலும், தேனிப்புக்குத் தடையிராமல் 5-6 நிமிடங்கள் மட்டும் சிறு மழை பெய்து அன்பர்களின் திருவருள் உணர்ச்சியைச் செழிப்பித்தது.

தேனிப்பு முறைகளை முறையாகப் பாடங்கேட்டுப் பயில வேண்டும் என்னும் உணர்வைப் பெருக்குகிற முறையில் ஆசிரிய அவர்கள் நேரத்திற் கேற்ப ஒருவகைத் தியான முறையை விளக்க, அன்பர்கள் அதன்படி தியானித்துக் கொண்டு தங்குமிடம் சேர்ந்தனர்.

இரவு (மீண்டும் சிறிது நேரம் மழை நன்றாகப் பொழிந்தது) 10 மணிக்கு மேல் அடிவாரத்தில் தென்னாப்பிரிக்கத் தமிழன்பர் திரு. மாணிக்கம் அவர்களின் கிளர்ச்சியான இசைப் பாடலுக்குப் பின் காஞ்சிபுரம் இயலிசைத் தமிழ் மணி திரு. சுந்தரமூர்த்தி அவர்களின் மணிவாசகர் வரலாறு பற்றிய இன்னிசை விரிவுரை இரவு நெடுநேரம் வரை மிகவும் நன்றாக நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன.

—தமிழ்ச்சிறுவன்.

PHONE 55034 TEL.ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பணமுதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

* நிலவுக்கு - - - - *

4

(முன் தொடர்ச்சி) [சந்திப்பு]

நிலவு! இப்பொழுதுதானடி பள்ளியில் படித்த கவனம் வருகிறது. அன்று ஆண்டு தோறும் நடக்கும் பள்ளி இறுதி விழா. நீ நடனத்திற்கும், நான் பாட்டுப் பாடியதற்கும், தேன் மொழி நடிப்புக்கும் பரிசுகள் பெற்றோமே கவனம் வருகிறதா?

தேன் மொழி அன்று நடித்ததைவிடப் "பொய்யை மெய்யெனக் காட்டி" நடிக்கும் இந்த நடிப்பு மெச்சத் தகுந்ததாக அமைந்திருந்தது.

இப்படியே இருந்தால் இந்த இக்கட்டான நிலை வளர்ந்து கொண்டேபோகும் என்று என் மனம் மாறியது.

மனதைத் தேற்றிக் கொண்டேன். உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன். எண்ணிய எண்ணம், நடந்த நிகழ்ச்சி- இவைகளை ஒன்று விடாமல் கூறி விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டேன்.

நடந்த நிகழ்ச்சிகளை வேகமாகக் கோவையாக ஒன்று விடாமற் கூறினேன். மனப்பாடப் பகுதியை மாணவன் ஆசிரியரிடம் பிறழாமல் சொல்வதைப் போல் தான், நான் அவரிடம் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறினேன்.

எண்ணத்திலே இடிவிழுந்தது. எண்ணாதது நடந்து விட்டது. எதிர் பார்த்தான் "ஏமாற்றமடைந்தாள்" தேன் மொழி நினைத்திருந்தாள்— எனக்கும் வேணிலுக்கும் கோபமூட்டி வேடிக்கை பார்க்க வேண்டுமென்று. அதற்குத் தான் நான் முற்றுப்புள்ளி வைத்து விட்டேனே.

"இளநகை அன்றும் அறிவாளி, இன்றும் அறிவாளியாகத் தான் விளங்குகிறாள் என்று எனக்குப்பட்டமளித்தாள் தேன் மொழி.

வண்டிக்காரனுக்குப் பணம் கொடுக்க வீதிக்குச் சென்ற வேணிலைக் கோபித்துக் கொண்டு சென்று விட்டார் "என்று தேன் மொழி திரித்துக் கூறினாள் என்பதையும் பிறகு தான் அறிந்தேன்.

"தனக்குத் துன்பம் நேரும் என்று முன்னதாகவே அறிந்தால் மிருகம்—தன் பதுங்குமிடம் (குகை) ஓடி ஒளிந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்.

இடையூறு நேரும் என்று அறிந்தால் பறவை தன் கூண்டுக்குள் ஓடி ஒளிந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். அபாயம் நேரும் என்று அறிந்தால், அதிலிருந்து விடுபட மனிதன் தன்னைப் போன்ற பிற மனிதனைத் தான் துணைக்கு நாடுகிறான்.

தேன் மொழியின் விளையாட்டுப் பேச்சினால் எனக்குத் துன்பம் நேரும் என்றறிந்தேன். வேணிலிடம் நடந்ததை வரிசையாகக் கூறி நான் தப்பித்துக் கொண்டேன்.

மனிதன் புலிக்குப் பயந்து வீடு கட்டவில்லை; பாம்புக்குப் பயந்து பூட்டு அமைப்பதில்லை; தேளுக்குப் பயந்து தாழ்ப்பாள் அமைப்பதில்லை; காடிக்குப் பயந்து தனக்குக் கட்டிடம் கட்டிக் கொள்வதில்லை; எல்லாம் தன்னைப் போன்ற, தன்னைச் சூழ்ந்திருக்கும் மனித சமுதாயத்திற்குப் பயந்து தான் என்ற கருத்து உண்மைதான் என்று உறுதிப்படுத்திக் கொண்டேன்.

"இளநகை! இன்று என்னிடம் இருந்து தப்பி விட்டாய்! பிறகு பார்த்துக் கொள்கிறேன் "என்பதைப் போல் இருந்தது, தேன் மொழி என்னைப் பார்த்த, பார்வை.

"தேன் மொழி! உட்காருங்கள் "என்று இரண்டு நாற்காலிகளைக் காண்பித்தேன்.

நஞ்சன் கூடுபல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர் தெரு, :: சென்னை-1

தேன் மொழி உட்கார்ந்து விட்டாள். வேனில் உட்காரச் சென்றார்.

"தன்மானத்தைப் பற்றிப் பிறருக்கு அறிவு புகட்டுவாய். உன் மானத்தை உன்னால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே அண்ணா! இளநகை என்னைத்தான் உட்காரச் சொன்னாள். உன்னை அவ்வாறு கூறவில்லையே. என்று எளனம் செய்வதற்கு ஆரம்பித்து விட்டாள் தேன் மொழி.

"சரிதான் நீ எனக்கு அறிவு புகட்ட ஆரம்பித்து விட்டாய் போலிருக்கிறது. எனக்கு அவசியமில்லை. அதை எழிலினிடம் கூறு. உன் அறிவுரைக்கு ஆதரவு கிடைக்கும். புகழுரை கிடைக்கும். அவன் புன்முறுவலையும் பார்ப்பாய், பரவசமும் அடைவாய்" என்றார் வேனில்.

குறும்பு அரும்பி இருந்த முகம் குனிந்து கொண்டது. சிரிப்பு முகம் மறைந்து விட்டது. சிங்காரப் பேச்சு ஒளிந்து கொண்டது. தேன் மொழி தலை குனிந்து கொண்டாள். நாணம் அவளைப் பற்றிக் கொண்டது.

இந்த நிலைக்கு அவளைக் கொண்டுவந்த அந்த "எழில்"! யாரென விளங்கவில்லை.

பிறகு அவர்களை உணவு உட்கொள்ள அழைத்தேன். உணவு முடித்துக்கொண்டு வந்து விட்டதாகக் கூறினார்கள்,

தண்ணீரில் இறங்குவதற்கு அச்சப்படும் மனிதன் நீந்தத் தெரிந்த பிறகு, பயப்படுவதில்லை. பற்றிய பயம் அவனை விட்டுப் பறந்துவிடும்.

முதன் முதலில் வேனிலிடம் பேசுவதற்கே பயமாகத்தான் இருந்தது. அவர் குணம் அறிந்த பிறகு, அவருடன் பேச ஆரம்பித்த பிறகு, என் அச்சம் சிறிதும் மிச்சமில்லாமல் மறைந்து விட்டது.

நாங்கள் மனம் விட்டுப் பேசினோம். தேன் மொழி இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டு வருகிறாளாம். கடந்த சில நாட்களுக்குமுன் நடந்த "சிலப்பதிகார" நாடகத்தில் கண்ணகியாக நடித்து முதல் பரிசு பெற்றுளாம்.

வேனில் சர்வகலாசாலை ஆராய்ச்சித் துறையில் தமிழாராய்ச்சி செய்து வருகிறாராம். அவராதரவில் தான் தேன் மொழி படித்து வருகிறாளாம்

அவர்கள் பெற்றோர்கள் கிராமத்தில் நில புலங்களைப் பார்த்துக்கொண்டு வீட்டோடு இருக்கின்றார்களாம். அவர்களுக்கு என்னைப்பார்க்க வேண்டுமென்ற ஆசை அதிகமாக இருக்கிறதாம்.

"எழில்" என்ற வார்த்தை கூறுவதிலிருந்து தேன் மொழி அதிகமாகப் பேசவில்லை. எதையோ நினைத்துக் கொண்டு இருப்பவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

அன்று மாலை அவர்கள், தாத்தா வந்த பிறகு சிறிது நேரம் பேசி இருந்து விட்டுச் சென்று விட்டனர். கடிதம் மிகவும் நீண்டு விட்டது.

எல்லோர் நலமும் அடங்கிய பதில் கடிதம் போடுவாய் என எண்ணும்.

[illegible]நகை.

குருகுலம் — வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

10. ஆத்திசூடி — கருத்துரை
விலை 0-0-3.

கிடைக்கும் இடம் :

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P. O., (S.I.R.)

* பாரதிகாட்டிய பாதை *

தங்க துரை

நம் நாடு நன்னிலை அடைவதற்கும், நானிலத்தார் புகழ்வதற்கும் வன்மை, முயற்சி, அஞ்சாமை, ஒற்றுமை உழைப்பு என்னும் பஞ்ச லட்சணங்களும் இன்றியமையாதவை. இவை சுதந்திர மலையின் வற்றாத ஜீவநதிகள் ஆகும். நாட்டின் நாகரீகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக விளங்குவது ஊக்கமும், உழைப்புமே யாகும். அன்னிய நாடுகள் செல்வத்தின் சிகரமாக விளங்குவதற்கும், நம் நாடு சீர் குன்றிச் சிதைவதற்கும் ஊக்கமும், உழைப்பும், ஒற்றுமையும் இல்லாமையே காரணமாகும்.

காவலாளியின் புதல்வன் ஐதர் காசினி புகழ மைசூர் நாட்டின் மணிமகுடம் தாங்கியதும், அரசன் ஆணைக்குட்பட்ட அதிகாரியின் அரும் புதல்வன் சிவாஜி அழியாப் புகழ் பெற்றதும், ஆதரிப்பாரின்றி அரை வயிற்று உணவுக்குத் திண்டாடித் தவித்த அறுதை குப்தன் அரசர்க்கரசனாக விளங்கியதும், அன்னை தந்தையற்று அன்னியரால் வளர்க்கப்பட்டு அலைந்து திரிந்த கரிகாலன் அவனி அதிர ஆட்சி புரிந்ததும், கட்டை வெட்ட வகையறியாத மூடன் காளிதாசன் கவியரசாய் விளங்கியதும், வழியில் பிறந்து குழியில் எறியப்பட்ட கம்பன் கவிக்கடலின் கரை கண்டதும் எதனால்? அவர்களுடைய ஊக்கத்தினாலும், உழைப்பினாலும், முயற்சியினாலும், அஞ்சாமையினாலுமே அல்லவா?

நீர் வளமும், நில வளமும் செழித்துச் செல்வத்தில் சிறந்து விளங்கிய தமிழ்த்தாயின் புதல்வர்கள் வாணிபம், கைத்தொழில், கலை, முதலிய வழிகளில் முயற்சியோடும், தைரியத்தோடும், ஊக்கத்தோடும் உழைத்து உலகம் புகழ விளங்கினார்கள் எனப் பண்டைய நூல்களில் பரக்கக் காணலாம். இன்று தமிழ்நாட்டின் நிலை என்ன? தமிழ்ச்சோலையின் இடையில் சுடர்விட்டு ஒளிரும் முன்னேற்ற மாளிகை சோம்பல் என்னும் பிரவாகத்தாலும், அச்சம் என்னும் மாருதத்தாலும், அவநம்பிக்கை என்னும் அடர் மழையாலும், வேற்றுமை என்னும் பிளவுகளாலும், அசைவு கண்டுவிட்டது. அசைவு கண்ட மாளிகை உரம்பெற வேண்டுமானால் பாரதியின் பாக்கள் முன்னேற்ற மாளிகையின் மணி மதிலாய் விளங்கவேண்டியது அவசியம்.

தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிக்கு, அரும்பணி புரிந்த வீரருள் தலைசிறந்தவர் பாரதியாகும். தமிழ் நாட்டு வீரச் சரிதையில் பொன் எழுத்தாற் பொலியும் நன்மணிச் சுடரும் பாரதியே. தமிழ்ச்சோலையின் கற்பகத் தருவாய் விளங்கிய பாரதியை அறியாதார் அவனியிலிரார். மங்காப் புகழ்பெற்ற நம் தமிழ் நாடு மாநிலத்தின் மணிமகுடமாய் விளங்க வேண்டுமென்பது அவரது பேரவா. வீரத் தியாகிகள் கட்டிய விடுதலைக் கோட்டையின் மணிக்கோபுரமாய் விளங்குவது பாரதியின் பாக்களே.

அடிமை என்னும் அந்தகாரத்தில் அழுந்திக் கிடந்த தமிழ் மக்கள் உறக்கம் நீங்கி எழ எட்டயபுரத்தில் கவிச்சூரியன் உதயமானார். ஏழாம் ஆண்டிலேயே பாரதியின் உள்ளத்தில் கவிதையாறு கரைபுரண்டது. பதினொரும் ஆண்டில் பாரதியை எட்டயபுர சமஸ்தானம் எதிர்கொண்டழைத்தது. பாரதி மட்டற்ற புலமையைக் காட்டி எட்டயபுர சமஸ்தானக் கவியாகிக் குபேரனும் அஞ்சும் கோமகனாக விளங்கி இருக்கலாம். ஆனால் சுதந்திரக்கனலைக் கக்கி வறுமைப் பிணிக்கு ஆளாகி வாட்ட முற்றார். தமிழ் நாட்டின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அவர் எழுதிய கவிதைகளும் கட்டுரைகளும் கணக்கில் அடங்காதன.

பாரதி மறைந்து பல ஆண்டுகள் ஆயினும் அவரது புகழ் அழியாது அவனியில் விளங்குகிறது. அவரது நூல்கள் தமிழ் நாட்டின் அழியா உயிரோவியங்களாய் ஒளி பெற்று மிளிர்கின்றன. அவரது பாக்கள் அடிமைப் பாலைவனத்தில் உரிமைப் பூங்காவை உருவாக்கிய கவியாறாக இன்னும் வளமீந்து கொண்டே இருக்கின்றன.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; ஜெ. பாலசுந்தரம்; ஜநநல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (செங்.)